2005 பிப்ரவரி 7]

50—

நந்தவனம் அமைத்தல்

***44439—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராணிப்பேட்டை தொகுதி, வள்ளிமலை கோயில் குன்றுகளின் தரமிழந்த பகுதிகளை பசுமைப்படுத்தி நந்தவனம் அமைக்கும் சீரிய திட்டம் செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. எம்.எஸ். சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளிமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலிலே, ஆண்டுதோறும் பிப்ரவரி மாதத்தில் 4 நாட்கள் தேர்த் திருவிழா நடைபெறுகிறது. இத்தேர்த் திருவிழாவில் இலட்சக்கணக்கான பக்தர்கள் கலந்துகொள்கிறார்கள். ஆடிக் கிருத்திகை தினத்தில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொள்கிறார்கள். மாதந்தோறும் கிருத்திகை தினத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் முருகப் பெருமானை தரிசிக்க வருகிறார்கள். வள்ளிமலை கோயில் சுற்றுலாத் தலமாக மாறி வருகிறது. வள்ளிமலை வனப் பகுதி வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. மலைப் பகுதி முழுவதையும் பசுமையாக்கவும், மக்கள் பெருமளவுக்குக் கூடுகின்ற இடங்களிலே நந்தவனம் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா, அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளிமலை கோயிலைச் சுற்றிலும் உள்ள தரம் இழந்த பகுதிகளில் ஏற்கெனவே ரூ.63,174 செலவில் 148.8 எக்டேர் பரப்பில் 72,000 மரக் கன்றுகள் நாவல், புங்கன், பரம்பை, கொடைவேலன் போன்ற மரங்கள் நட்டு, நன்றாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அதனால் அந்தப் பகுதியில் தற்போது நந்தவனம் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

[2005 பிப்ரவரி 7

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம்.எஸ். சந்திரசேகரன். (குறுக்கீடு) திரு. இரா. வில்வநாதன்.

திரு. இரா. வில்வநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள 108 வைணவத் திருத்தலங்களில் ஒன்றான சோளிங்கர் லட்சுமிநரசிம்ம சுவாமி மலைக் கோயில் என்னுடைய தொகுதியில் உள்ளது. அந்த மலைக் கோயிலைச் சுற்றியுள்ள மலைகள் தற்போது பாலைவனமாகக் காட்சியளிக்கின்றன..

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்குச் சம்பந்தமற்றது. வினா எண் 51, திரு. ஆர். சாமி, மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

51—

அரசு கலைக் கல்லூரி

***19520—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதியிலுள்ள அரசு கலைக் கல்லூரியில் எம்.எஸ்சி. விலங்கியல், எம்.எஸ்சி. கணிதவியல், கணினி அறிவியல், எம்.ஏ. பொருளாதாரம் ஆகிய பாடப் பிரிவுகள் தொடங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் அரசு கலைக் கல்லூரியில் புதிய பாடப் பிரிவு தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், மேலூர் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி ஏற்கெனவே இயங்கி வருகிறது. அந்தக் கல்லூரியில் இளநிலை பட்டப் படிப்பு படித்துவிட்டு, முதுநிலை பட்ட மேற்படிப்பிற்கு வெளி மாவட்டங்களுக்குச்